1973 மார்ச் 6]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மன்றத்தின் மூலம் தீர்மானம் போடுவதானால், அதுவும் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

Development of Tranquebar and Vedaranyam

* 262 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether there is any proposal to make Tranquebar and Vedaranyam as Sea-side resorts; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த இடங்களுக்கு யாத்திரிகர்கள் அதிகமாக வந்து செல்வதால், இந்த இடங்களை யாத்திரிகள் ஸ்தலமாக மேம்படுத்தும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கடலோரப் பகுதிகள் உல்லாசப் பிரயாணிகள் வந்து செல்லக்கூடிய அளவைப் பொறுத்து மேம்படுத்தப்படலாம். தரங்கம்பாடி, வேதாரண்யம் ஆகிய இடங்களை மேம்படுத்தும் திட்டம் இப்போது இல்லை.

Wild life week

* 263 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state the details of the wild life week celebrations in this State proposed by the Government during 1972?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவை முன் ஓர் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த வன விலங்குகள் வார விழா அறிக்கையைப் பார்க்கும்போது வன விலங்குகளைப் பற்றித்தான் விளம்பரப்படுத்தப்

@ 396–397-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பட்டிருப்பதாகத் தெரிகிறது. இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினை வன விலங்குகளைப் பாதுகாப்பதுதான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற 10 பள்ளிகளிலிருந்தும்—10 வாக்கியங் களிலிருந்தும் வன விலங்குகள் பாதுகாக்கப்படும் முறைகள் தூண்டப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே துண்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. கல்லூரிகளில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

திரு. ச. சங்குமுத்துத் தேவர் : வன விலங்குகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய இந்த நேரத்திலே மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளாகிய அம்பாசமுத்திரம், நாங்குனேரி போன்ற இடங்களில் வன விலங்குகள் வேட்டையாடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டனவா? அல்லது தானாகவே இறந்துவிடு கின்றனவா? அங்கே வனவிலங்குகள் வரவரக் குறைந்து போவதற்கு என்ன காரணம்? அரசாங்கம் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்கான விளக்கம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

THIRU M. A. LATHEEF : Sir, very rare species of wild animals are being wiped out because of unscrupulous shooting by unscrupulous persons. That is why in my area, Javadu Hills, long before it was suggested that there should be an animal sanctuary. So, what step the Government have taken to preserve wild life in my area?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. எல்லோரும் அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சென்னை—அயநல்லூர் பேருந்துப் பணி

*264 வின—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டித் தாலா வட்டம், அயநல்லூரிலிருந்து சென்னைக்குப் பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

1973 மார்ச் 6]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தேவம்பட்டுக்கும், அயநல்லூருக்கும் பேருந்துகள் விடுவதற்கான செயற்குறிப்பை பல்லவா போக்குவரத்துக் கழகம் பரிசிலித்தது. ஆனால் இக் கழகம் நாட்டுடைமையாக்கப்பட்ட சில பேருந்து வழித் தடங்களை ஏற்று அவற்றில் பேருந்துகள் விட வேண்டியிருப்பதால் மேற்கூறப்பட்ட இரு ஊர்களுக்கு விடுவதற்குப் பேருந்துகள் ஒதுக்குவது தற்போது சாத்தியமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தற்போது சாத்தியம் இல்லை என்று சொன்னார்கள். 1973-க்குள்ளாவது அயநல்லூரிலிருந்து சென்னைக்கு பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா? தனியார்களுக்கு பஸ் விடுவதற்கு ஆர்.டி.ஓ. அவர்கள் பெர்மிட் தர முடியாது என்று சொல்லி விட்டார்கள். ஆகையால் 1973-க்குள்ளாக பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பஸ் விடுவதற்கு ஏற்ற இடம் என்று அந்த இடம் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் பஸ்கள் கிடைப்பதில்லை. குறிப்பாக சேசிஸ் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. தேவையான அளவுக்கு சேசிஸ் கிடைக்குமானால் டிசம்பர் வரை கூட பஸ் விடுவதற்காகக் காத்திருக்க வேண்டியதில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, பஸ்கள் விட வேண்டுமென்று முடிவு செய்தாலும் விடுவதற்கு பஸ்கள் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தற்போது மத்திய அரசு பஸ்கள் வாங்குவதற்கு. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கேள்வி இரண்டு விதத்திலே தப்பானது. முதலில், இந்தக் கேள்வி மூலக்கேள்விக்கு தொடர்புடையது அல்ல. இரண்டாவது, கும்மிடிப்பூண்டியைப் பற்றிக் கேட்பதற்கு கும்பகோணத்தைச் சுற்றி வருவதுபோல இருக்கிறது. ஆகவே, துணைக் கேள்வி போடுவதாக இருந்தால் நேரடியாகவே கேளுங்கள். சுற்றி வளைக்க வேண்டாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. நா. வீராசாமி : அமைச்சரவர்கள் கும்மிடிப்பூண்டியைப் பற்றிச் சொன்னார்கள். நானும் கும்மிடிப்பூண்டியைப் பற்றித்தான் கேட்கிறேன். தற்போது விடுவதற்கு பஸ் இல்லை என்று சொன்னார்கள். இப்போது பஸ்கள் விடுவதற்கு மத்திய அரசு 'டில்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனுக்கு' 2½ லட்சம் ரூபாய் மானியமும், 2½ லட்சம் ரூபாய் கடனும் கொடுத்திருக்கிறது. அதைப்போல் கடனும் மானியமும் பெற நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டில்லியிலே பஸ் ஓடுகிறது என்றால் சென்னையில் உள்ள நாமும் பெருமைப்பட வேண்டும். அதுதான் தேசிய ஒருமைப்பாடு.

சென்னை–குருவாயல் பேருந்துப் பணி

* 265 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், குருவாயல் கிராம வட்டார மக்களிடமிருந்து 17—8—1972 அன்று குருவாயல் முதல் சென்னை பிராட்வே வரை பேருந்துவிட ஏற்பாடு செய்யுமாறு போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) அவ் வழித்தடம் பேருந்துப் போக்குவரத்துக்கு ஏற்றதாயில்லை.

திரு. கா. வேழவேந்தன் : அது 1972-லே இருந்த நிலைமை. இப்போது புதிய ரோடு நன்றாகப் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது பேருந்துகள் விடுவதற்கு அமைச்சரவர்கள் துரிதமான நடவடிக்கை எடுத்து, விரைவிலே உத்தரவு பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நிலைமைகள் மாறினால் வசதிகளும் மாறும்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS